ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

## வாழ்த்துச் செய்தி

நாட்டில் நல்லாட்சியை நிறுவுவதற்குத் தேவையான அனைத்து அரசியல், சமூக, சட்ட ரீதியான மறுசீரமைப்புகளை நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்தே எமது அரசு அதிகாரத்திற்கு வந்தது. அரசியல் அமைப்பின் 19வது திருத்தம் நிறைவேற்றப்பட்டதுடன், வலுவானதான சுயாதீன ஆணைக்குழுக்களால் அந்த மறுசீரமைப்புக்கான அடிப்படைக் கதவு திறக்கப்பட்டது என்பது அனைவரும் விவாதமின்றி ஏற்றுக்கொள்ளும் விடயமாகும். அவ்வாறு நிறுவப்பட்ட சுயாதீன பொதுச் சேவை ஆணைக்குழு அரசியல் தலையீடுகள் இன்றி செயற்படுவதற்கு பலமான கட்டமைப்பை அரச ஊழியருக்கு வழங்கியுள்ளது.

ஆனால் எந்தவொரு நிர்வாக கட்டமைப்பும் சட்டங்கள், ஒழுங்கு விதிகளை மீறலாம் என்பது கருத்தாகாது. நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிறுவனத்தினால் பிரஜை ஒருவருக்கு அநீதியோ, பாதிப்போ ஏற்படுத்தப்பட்டிருப்பின் அதற்கான காரணங்களை தேடுதல், புலனாய்வு செய்தல், நிவாரணம் அளித்தல் மற்றும் அதனை சீர்செய்வதற்கும் அதிகாரங்களைக்கொண்ட நிறுவனம் ஒன்று இருக்க வேண்டும்.

இந்த தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்காகவே நிர்வாக செயற்பாடுகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் நிறுவனம் எனப்படும் குறைகேள் அதிகாரி அலுவலகம் நிறுவப்பட்டது. இருப்பினும் அவ்வாறான நிறுவனம் இருப்பதனால் மட்டும் சாதாரண மக்கள் அதன்மீது நம்பிக்கை வைத்து வருவார்களென எதிர்பார்க்க முடியாது.

சமூகத்தின் குறைந்த சிறப்புரிமைகளையுடைய மக்களிடம் நெருங்கி, அரச சேவை தொடர்பில் ஏதாவது முறைப்பாடுகள் இருந்தால் அவற்றை சமர்ப்பிப்பதற்காகவும், நியாயமான தீர்வை பெறுவதற்கும் உள்ள உரிமை தொடர்பில் அவர்களை தெளிவுபடுத்தி பலப்படுத்துவதும் நல்லாட்சியை பிரஜைகளின் உரிமையாக்குதல் அரசின் பொறுப்பு என்பதனாலாகும்.

அக்குறிக்கோளுடன் அறிமுகப்படுத்தப்படும் புதிய செயற்திட்டத்திற்கமைய உருவாக்கப்படும் இந்த இணையத்தளம், பொதுமக்களுக்கு உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பில் தெளிவூட்டும் வலுவான நடவடிக்கையாக இருக்குமென எதிர்பார்க்கிறேன்.

மைத்ரிபால சிறிசேன

**2016 செப்டெம்பர் 29ஆம் திகதி**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka